உ

கடவுள் துணை.

# சனிபகவான்தோத்திரம்,

## நவக்கிரகதோத்திரம்

இவ்விரண்டும் அடங்கியிருக்கின்றன.

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

43

உ

கடவுள் துணை.

# சனிபகவான் தோத்திரம்.

## காப்பு-வெண்பா.

தேவரெண்டிக்கதிபர் சித்தரொடுகிம்புருடர்
மூவர்முனிவர்முதலோரை-மேவியுறுந்
தாரணிந்தமார்பன் சனிபகவான்கதைபுகலக்
காரணிந்தயானைமுகன்காப்பு.

ஆதிவேதாந்தமுதலறியாஞான வைந்தெழுத்தினுட் பொருளையயன்மாறேடும், சோதிசிற்றம்பலத்திலாடி நின்ற சுடரொளியைநீபிடித்ததோஷத்தாலே, பாதி மதிசடைக் கணியவரவம்பூணப், பதியிழக்கச்சுடலை தனிற்பாடியாடச், சாதியில்லாவேட னெச்சிற்றின்ன வைத்தாய் சனியனேகாகமேறுந்தம்பிரானே. க

வேலவனைவேங்கைமர மாக்கிவைத்தாய் விறகுகட் டுச்சொக்கர்தமை விற்கவைத்தாய், மாலினையேயுற லோடுகட்டுவித்தாய் வள்ளிதனைக் குறவரதுவனத்தில் வைத்தாய், காலனைமார்க்கண்டனுக்கா வரனுதைத்த காரணமுநீபிடித்தகருமத்தாலே, சாலவுனையான்றொ ழுதேனெனைத்தொடாதே சனியனேகாகமேறுந்தம்பி ரானே. உ

மநுசுதவயோத்தியில்வாழ் தசரதன்றன்மக்களையும் வனவாசமாக்கிவைத்தாய், பஞ்சவர்கள் சூதினால்பதியிழந்து பஞ்சுபடும்பாண்டவர்கள்படச்செய்வித்தாய், எஞ்சலிலாவரிச்சந்திரன் பெண்டைவிற்றே யிழிகுலத்திலடிமையுறவிசையவைத்தாய், தஞ்சமென்றேவுனைப் பணிந்தே னெனைத்தொடாதே சனியனேகாகமேருந் தம்பிரானே. ௫

அண்டமாயிரத் தெட்டுமரசுசெய்த வடல்சூரபது மனையுமடக்கிவைத்தாய், மண்டலத்தையாண்டாளச் சக்கிரவர்த்தி மனைவியொடுவனமதனி லலையச்செய் தாய் விண்டலத்தைபானுகோபன்றனாலே, வெந்தணலாச்சூரரைவெருவச்செய்தாய், தெண்டனிட்டேனெந்நாளுமெனைத்தொடாதே, சனியனேகாகமேருந் தம்பிரானே. ௬

அண்டர்கோன்மேனியிற் கண்ணாக்குவித்தா யயன் சிரத்தைவயிரவனாலறுப்பவித்தாய், திண்டிரல்கொள் கௌதமனாலகலிகைதான் சிலையாகச்சாபமுறவேசெய்வித்தாய், தண்டரளநகையிரதிமாறன்றன்னைச், சங்கரனார்நுதல்விழியிற் றணல்செய்வித்தாய், சண்டமிலாதுனைத்தொழுதே னெனைத்தொடாதே, சனியனேகாகமேருந்தம்பிரானே. ௭

பாருலவுபருதியைப்பல்லுதிரவைத்தாய், பஞ்சவர்க்குத்தூதுபீதாம்பரனைவைத்தாய், தாருலவுவாலிசுக்ரீ

பன்றம்மைத் தாரையினுற்றீராத சமர்செய்வித்தாய் சூரனெனுமிலங்கை ராவணன்றன்றங்கை சூர்ப்பனகி மூக்குமுலை துணிசெய்வித்தாய், தாரணியுமார்பாவெனைத்தொடாதே சனியனேகாகமேருந்தம்பிரானே. ()

சுக்கிரன்றன்கண்ணிழந்தா னிலங்கையாண்டு துலங்குமிராவணன்சிரங்கண்டிக்கவிழ்ந்தான், மிக்கபுகழிரணியன்றுன்வீறழிந்தான், விளங்குதிரிபுராதிகனும்வெந்துமாண்டார், சக்கரத்தாலுடலறுந்தான் சலந்தரன்றுன்றுருகாசூரனுமேசமரின்மாண்டான், தக்கன்மிகச்சிறமிழந்தா னின்றேஷத்தாற் சனியனேகாகமேருந் தம்பிரானே. எ

அந்தமுள வைங்கரன்கொம்பறவேசெய்தா யறுமுனிவர்மனைவிகள்கற்பழியச்செய்தாய், சந்திரன்றன்கலையழிந்து தழைக்கச்செய்தாய், சங்கரனைப்பிச்சைதானெடுக்கச்செய்தாய், தந்திமுகச்சூரனுயிர்தளரச்செய்தாய் சாரங்கதரன்கரத்தை தறிக்கச்செய்தாய், சந்ததமுனைப்பணிவே னெனைத்தொடாதே சனியனே காகமேருந் தம்பிரானே. அ

சீதைதனையிராவணனுற்சிறைசெய்வித்தாய் தேவர்களைச்சூரனுற்சிறைசெய்வித்தாய், மாதுதுரோபதைதுயிலைவாங்குவித்தாய், மகேச்சுரனையுமைபிரியும்நங்க

செய்வித்தாய், போதிலயன்முளிற்றளை பூட்டிவித்தாய், பொதியையினி லகத்தியனைப் பொருந்தச்செய்தாய், தாதுசேர்மலர்மார்பா வெனைத்தொடாதே சனியனே காகமேறுந்தம்பிரானே. க

அப்பர்தமைக்கருங்கல்லோ டலையிற்சேர்த்தா யரனடியின்முயலகனை யடங்கச்செய்தாய், செப்புமாணிக்கர்தமைச்சிறையிலிட்டாய், சீராமனை மச்சவுருவெடுக்கச்செய்தாய், ஒப்பிலனுமான்வாலிலொலி தீயிட்டாயொலிகடலினஞ்சையர னுண்ண வைத்தாய், தப்பிலாதுனைத்தொழுவேனெனைத்தொடாதே சனியனேகாகமேறுந்தம்பிரானே. கo

நீரினையுண்டெழுமேகவண்ணா போற்றிநெடுந்தபத்திலுறுகமலக்கண்ணா போற்றி, சூரியன்றன்றவத்தில்வந்தபாலாபோற்றி துலங்குநவகிரகத்தூண்மேலாபோற்றி, காரியெனப்பெயர்களுபகாராபோற்றி, காசினியிற்கீர்த்திபெற்றதீராபோற்றி, முதுமகளின்முண்டகத்தாள்போற்றிபோற்றி. கக

சனிபகவான் தோத்திரம்

முற்றிற்று.

விநாயகர் துணை.

# நவக்கிரகதோத்திரம்.

காப்பு-வெண்பா.

மண்ணுளுயிர்கட்கனைத்து மாறுதளித்துநல
நண்ணுநவக்கிரக நண்புசொலத்-தண்ணுலவு
திங்களணிதங்குமுயர் செஞ்சடையருண்மகிழ்செய்
கங்கையருளோங்கரனுர் காப்பு.

சூரியன்.

காசினியிருளை நீக்குங்கதிரொளியாகியெங்கும்
பூசனையுலகோர்போற்றப்புசிப்பொடுசுகத்தைநல்கும்
வாசியேழுடையதேர்மேன்மகாகிரிவலமாய்வந்த
தேசிகாவெனைரட்சிப்பாய்செங்கதிரவனேபோற்றி.

சந்திரன்.

அலைகடலதனிநின்று மன்றுவந்துதித்தபோது
கலைவளர்திங்களாகிக் கடவுளரெவருமேத்துஞ்
சிலைமுதலுமையாள்பங்கன் செஞ்சடைபிரையாய்மே
ரு, மலைவலமாகவந்த மதியமேபோற்றிபோற்றி.

செவ்வாய்.

வசனநற்றைரியத்தோடு மன்னவர்சபையில் வார்த்
தை, புசபலபராக்ரமங்கள் போர்தனில்வெற்றியாண்

மை, நிசமுடனவர்க்குநீணிலந்தனிலளிக்குங், குலனில மகனுஞ்செவ்வாய் குறைகழல்போற்றிபோற்றி. ௩

## புதன்.

மதனநூல்முதலாநான்கு மறைபுகல்கல்விமானம்
விதமுடனவரவர்க்குவிஞ்ஞைகளருள்வோன்றிங்கள்
சுதன்பவுசுபாரிசுகம்பலகொடுக்கவல்லன்
புதன்கவிபுலவன்சீர்மால்பொன்னடிபோற்றிபோற்றி.

## குரு.

மறைமிகுகலைநூல்வல்லோன்வானவர்க்கரசன்மந்த்ரி
நறைசொரிகற்பகப்பொன்னாட்டினுக்கதிபனாகி
நிறைதனஞ்சிவிகைமண்ணினீடுபோகத்தைநல்கு
மிறையவன்குருவியாமிருமலர்பாதம்போற்றி. ரு

## சுக்கிரன்.

மூர்க்கவான்சூரன்வாணன்முதலினோர்குருவாய்வை யங், காக்கவான்மழைபெய்விக்குங் கவிமகன்கனகமீ வோன், தீர்க்கவானவர்கள்போற்றச் செத்தார்தமை யெழுப்பும், பார்க்கவன்சுக்கிராச்சாரி பாதபங்கயமே போற்றி. சு

## சனி.

முனிவர்கடேவரேழும் மூர்த்திகள்முதலினோர்கள்,
மனிதர்கள்சகலவாழ்வின் மகிமையதல்லாலுண்டோ,

கனிவுளதெய்வம்நீயே கதிர்சேயேகாகமேறுஞ் சனி யனேயுனைத்துதிப்பேன் றமியனேற்கருள்செய்வாயே.

## இராகு.

வாகுவோர்நெடுமான்முன்னம்வானவர்க்கமுதமீயும் போதுமக்காலையுன்றன் புணர்ப்பினுற் சிரமேயுற்றுப், பாகுசேர் மொழியாள்பங்கன் பரன்கையில் மீண்டுப் பெற்ற, இராகுவேயுனைத்துதிப்பேன் ரட்சியும்ரட்சிப் பாயே. அ

## கேது.

பொன்னையினுரத்திற்கொண்டேன் புலவர்தம்பொ ருட்டாலாழி, தன்னையேகடைந்துமுன்னந்தண்ணமு தளிக்கலுற்ற, பின்னைநின்கரவானுண்ட பெட்பினிற் சிறம்பெற்றுய்ந்தா, யென்னையாள்கேதுவேயிவ் விரு நிலம்போற்றத்தானே. கூ

## பொது.

சூரியன் சோமன்செவ்வாய் சொற்புதன் வியாழம் வெள்ளி, காரியமிராகுகேது கடவுளரென்பாணுமத்தா ரியல்சக்கரத்தைத் தரித்திரர்பூசித்தாலும், பாரினிற் புத்திருண்டாம் பாக்கியநல்குந்தானே. க0

முற்றிற்று.